# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### ஜனதா விமுக்தி பெரமுன பொதுச் செயலாளர் திரு ரில்வின் சில்வா அவர்களின் இந்திய விஜயம்

ஜனதா விமுக்தி பெரமுன பொதுச் செயலாளர் திரு ரில்வின் சில்வா அவர்கள் கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையின் (ICCR) நிகழ்ச்சித்திட்டமான கீர்த்திமிகு விருந்தினர்கள் செயல்திட்டத்தின் கீழ் 2026 பெப்ரவரி 05 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இந்தியாவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ கிட்ணன் செல்வராஜ், கௌரவ இளங்குமரன் கருணநாதன், ஜேவிபியின் மத்திய குழு உறுப்பினர் திரு ஜானக அதிகாரி, ஜேவிபியின் ஊடக பிரிவின் பிரதானி ஹேமதிலக கமகே மற்றும் ஜேவிபியின் சர்வதேச உறவுகள் பிரிவின் உறுப்பினர் கல்பனா மதுபாஷினி ஆகியோரும் இணைந்துகொண்டிருந்தனர். இந்த விஜயத்தின்போது குறித்த பேராளர்கள் புது டில்லி, அஹ்மதாபாத் மற்றும் திருவனந்தபுரம் ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்திருந்தனர். இது திரு ரில்வின் சில்வா அவர்களது முதலாவது இந்திய விஜயமாகும்.

2. புது டில்லியில் நடைபெற்ற உத்தியோகபூர்வ சந்திப்புகளின் அங்கமாக, ஜேவிபி பொதுச் செயலாளர் தலைமையிலான பேராளர்கள் வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் சு.ஜெய்ஷங்கர், பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு பவான் கபூர் ஆகியோரைச் சந்தித்திருந்தனர். 'அயலுறவுக்கு முதலிடம்' என்ற கொள்கை மற்றும் 'மகாசாகர்' தொலைநோக்கு ஆகியவற்றின் அடிப்படையில், இந்தியா எப்போதும் இலங்கைக்கு உண்மையானதும் நம்பகமானதுமான பங்காளியாக இருக்குமென இச்சந்திப்புகளின்போது இந்தியத் தரப்பு உறுதிப்படுத்தியது. இரு நாடுகளின் பரஸ்பர நன்மைக்கான வளர்ச்சி வாய்ப்புகள் மற்றும் சமூக நலன்புரித் திட்டங்கள் குறித்தும் இந்த சந்திப்புகள் கவனம் செலுத்தின. அத்துடன், இலங்கை மாணவர்களுக்கு ICCR வழங்கும் பரந்தளவிலான கலாசார செயற்பாடுகள் மற்றும் பல்வேறு புலமைப்பரிசில்கள் தொடர்பாகவும் இப்பேராளர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

3. இந்திய தனித்துவ டிஜிட்டல் அடையாள ஆணையம், தேசிய பேரிடர் முகாமைத்துவ ஆணையம், கதி சக்தி மற்றும் இந்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றுக்கும் அப்பேராளர்கள் விஜயம் மேற்கொண்டிருந்தனர். டிஜிட்டல் மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு, பேரிடர் தயார்நிலை மற்றும் பதில் நடவடிக்கைகள், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் ஸ்திரமான விவசாய நடைமுறைகள் ஆகிய துறைகளில் இந்தியாவின் தொழில்நுட்ப வல்லமையை புது டில்லியில் நடைபெற்ற நிகழ்வுகள் முழுமையாக வெளிப்படுத்தியிருந்தன. அதுமட்டுமல்லாமல், பல நூற்றாண்டுகள் பழமையான நாகரிக இணைப்பை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில், புத்த பெருமானின் புனித பிப்ரஹ்வா சின்னங்களின் பிரமாண்டமான சர்வதேச கண்காட்சியையும் இப்பேராளர்கள் பார்வையிட்டிருந்தனர்.

4. அஹ்மதாபாத்தில் குஜராத் முதலமைச்சர் ஸ்ரீ புபேந்ரா பட்டேல் மற்றும் துணை முதலமைச்சர் ஸ்ரீ ஹர்ஷ் சங்கவி ஆகியோருடன் இப்பேராளர்களது வெவ்வேறான சந்திப்புகள் நடைபெற்றிருந்தன. பாலுற்பத்தி தொழில் துறை, உட்கட்டமைப்பு, கூட்டுறவு இயக்கம், நிதி தொழில்நுட்ப கட்டமைப்பு, சுற்றுலாத்துறை, புத்தாக்கம் மற்றும் தொழில்முயற்சியாண்மை உள்ளிட்ட துறைகளில் குஜராத்தின் முழுமையான வளர்ச்சி மாதிரி குறித்து இருதரப்பினரும் விவாதித்திருந்தனர். அத்துடன் அமுல், திரிபுவன் ஷங்கரி பல்கலைக் கழகம், குஜராத்தின் சர்வதேச நிதி தொழில்நுட்ப நகரம், தொழில் முயற்சியாண்மை மற்றும் தொழில்நுட்பத்துக்கான சர்வதேச நிலையம் (i-Create) ஆகியவற்றுக்கும் இப்பேராளர்கள் விஜயம் மேற்கொண்டிருந்தனர். அத்துடன், மகாத்மா காந்தி அவர்களது சபரிமதி ஆச்சிரமத்திலும் அவர்கள் மரியாதை செலுத்தினர்.

5. இதேவேளை, திருவனந்தபுரத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த திரு ரில்வின் சில்வா மற்றும் அவரது பேராளர்கள் கேரள முதலமைச்சர் ஸ்ரீ பினராயி விஜயன் அவர்களுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தனர். மேலும் இந்தியாவின் விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் குறித்து அறிந்துகொள்வதற்காக அப்பேராளர்கள் விக்ரம் சாராபாய் விண்வெளி நிலையத்தைப் பார்வையிட்டதுடன் பொது தனியார் பங்குடைமை மாதிரியின் கீழ் உருவாக்கப்பட்ட விழிஞ்சத்தில் உள்ள இந்தியாவின் முதல் ஆழ்கடல் கொள்கலன் மாற்றல் துறைமுகத்தையும் பார்வையிட்டனர்.

6. ஜேவிபி பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா அவர்கள் தலைமையிலான ஜேவிபி பேராளர்களது விஜயமானது இலங்கையில் கட்சி எல்லைகளுக்கு அப்பால், அரசியல் தலைவர்களுடன் இந்தியா மேற்கொள்ளும் தொடர்ச்சியான ஈடுபாட்டின் ஓர் அங்கமாகும்.

************

**கொழும்பு**
**12 பெப்ரவரி 2026**